dakshin

தமிழ்நாடு மீன் தொழிலாளர் உரிமைகள் புத்தகம்

2023

தக்ஷிண் அறக்கட்டளை என்பது, சுற்றுச்சூழல் வளங்குன்றா நிலை மற்றும் சமூக நீதிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள, லாப நோக்கமற்ற, அரசு அல்லாத அமைப்பாகும். இந்த அமைப்பு இந்தியா முழுவதும் சிறுதர மீன்பிடி தொழிலாளர்களிடையே வளங்குன்றா வளப் பயன்பாடு மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருகிறது. லட்சத் தீவுகள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், ஒடிசா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் இயங்கிவருகிறது.

மேற்கோள் காட்ட:

தக்ஷிண் அறக்கட்டளை, 2023. தமிழ்நாடு மீன் தொழிலாளர் உரிமைகள் புத்தகம்.

ஒப்புகைகள்:

ஆராதிதா ஸ்ரீவஸ்தவா, ஆதித்யா பிள்ளை, வேலுமணி த, இதிகாஸ்,நயனா உதய்சங்கர், ஆர்த்தி ஸ்ரீதர், நவீன் நம்பூதிரி, ஜி.ஜோசப் ஆனந்தன், கடலோர முதன்மை கூட்டுறவு உதவி தொகை பெல்லோவ்ஸ், தக்ஷிண் அறக்கட்டளை, பெங்களூரு

நிதி ஒப்புகை:

இந்தப் புத்தகம் Accenture பன்னாட்டு அறக்கட்டளையால் ஆதரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் சமீபத்திய கொள்கை மற்றும் திட்ட மாற்றங்களின் அடிப்படையில் மாறலாம்.

முன்னுரை

ஒரு பத்தாண்டுகளுக்கு மேலாக, தக்ஷிண் அறக்கட்டளை நம் நாட்டில் உள்ள கடல்சார் மாநிலங்களில் உள்ள சிறிய அளவில் இயங்கும் மீனவர்களுக்கான உரிமைகள் அடிப்படையிலான, வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் பணியாற்றி வருகிறது. பல ஆண்டுகளாக ஒரு மீனவனாக, மீனவ சமூகத்தில் நான் கண்ட முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று, தற்போதுள்ள திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்த விழிப்புணர்வு மீனவர்களிடையே இல்லாததுதான். தக்ஷிணின் தற்போதைய முயற்சியான திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்த விழிப்புணர்வு மீனவர்களுக்கு இடையே இந்த கையேட்டு மூலம் ஏற்படுத்துவது காலத்தின் தேவை, அதனை நாங்கள் மனதார வரவேற்கிறோம். தக்ஷிண் அறக்கட்டளை மற்றும் இராமநாதபுரம் மீன் தொழிலாளர் தொழிற்சங்கம் (RFTU) பல பிரச்சனைகளில் இணைந்து பணியாற்றுவதில் நீண்ட உறவைப் பகிர்ந்து கொள்கின்றன. இராமநாதபுரம் மீன் தொழிலாளர் தொழிற்சங்கம் (RFTU) வில் உள்ள நாங்கள் தக்ஷிணின் முயற்சியை முழுமையாக அங்கீகரித்து, எங்கள் ஆதரவை வழங்குகிறோம், மேலும் கூட்டு முயற்சிகளுடன் இந்த கையேட்டையும் அதன் தகவல்களையும் கடைசி மைல் வரை சென்றடைவதை உறுதி செய்ய ஒத்துழைப்போம், மேலும் மிகவும் தாழ்த்தப்பட்ட மீனவர்கள் இந்த கையேட்டை பயன்படுத்தி அவர்களுக்கான திட்டங்கள் மற்றும் மானியங்களைப் பெற முடியும் என்று உறுதியாக நம்புகிறோம். இந்த முயற்சியானது மீனர்வகளின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கிய ஆதரவாக செயல்படும் என நம்புகிறேன்.

ஜி.ஜோசப் ஆனந்தன்
பொதுச் செயலாளர்
இராமநாதபுரம் மீன் தொழிலாளர் தொழிற்சங்கம்

உள்ளே

1. இந்தப் புத்தகத்திற்கான கையேடு **1**

2. தமிழ் நாட்டில் கடல் சார்ந்த மீனவர்களுடைய உரிமைகள் **3**

3. உரிமைகள்: ஓர் அறிமுகம் **8**

4. உரிமைகளின் பட்டியல்

4.1 மீனவர் நலத் திட்டங்கள் 15

4.2 கடல் சார்ந்த மீனவர் சொத்துகள் 34

4.3 உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்த்தல் 47

4.4 பயிற்சிகள் 62

4.5 மீன்களைச் சந்தைப்படுத்துதல் 70

4.6 பிற திட்டங்கள் 84

5. பின்னிணைப்புகள் **88**

1. இந்தப் புத்தகத்திற்கான கையேடு

இந்தப் புத்தகம் யாருக்கானது?

இந்தப் புத்தகம் தமிழ் நாட்டில் உள்ள கடல் சார்ந்த மீன் தொழிலாளர்கள், குறிப்பாக, சிறிய அளவில் இயங்கும் கடல் சார்ந்த மீன் தொழிலாளர்களுக்கானது. முதன்மையாக, சிறிய அளவில் கடல் சார்ந்து மீன் பிடிக்கும் கிராமங்களில், ஏற்கெனவே உள்ள அரசு வருவாய் ஆதரவுத் திட்டங்களைப் பற்றிய தகவல்களும் மக்கள் அவற்றில் இணைவதும் குறைவாகக் காணப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள கடல் சார்ந்த மீன் தொழிலாளர்களுக்குத் தகவல்களைப் பரப்பவும், ஏற்கெனவே உள்ள அரசு ஆதரவு அணுகப்படுவதை மேம்படுத்தவும் இந்தப் புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இளம் மீனவர்கள், பெண் மீனவர்களுக்குக் கிடைக்கும் திட்டங்களையும் இந்தப் புத்தகம் சுட்டிக் காண்பிக்கிறது.

இந்தத் திட்டங்களை எப்படி அணுகலாம்?

இந்தப் புத்தகத்தில் உள்ள பெரும்பாலான திட்டங்களை அணுகுவதற்கு, மீன்வளத் துறையின் உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளலாம். இந்த ஆவணத்தின் நிறைவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநருடைய தொலைபேசி எண்கள், அலுவலக முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன (தற்போது இங்குதான் தக்ஷிண் அறக்கட்டளை சிறுதர மீன் பிடிக்கும் சமூகங்களுடன் பணியாற்றி வருகிறது). மீன் தொழிலாளர்கள் மீன்வளத் துறையால் நியமிக்கப்பட்டுள்ள துணை ஆய்வாளர்கள், உள்ளூர் சாகர் மித்ரா-க்களையும் தொடர்புகொள்ளலாம். கிராம அளவில் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு வழிசெய்யும் பொறுப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தில் என்னவெல்லாம் உள்ளது?

இந்தப் புத்தகம் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: மீனவர் நலத் திட்டங்கள், கடல் சார்ந்த மீனவர் சொத்துகள், உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்த்தல்,

பயிற்சிகள் மற்றும் மீன்களைச் சந்தைப்படுத்தல். ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு திட்டம் விவரிக்கப்பட்டுள்ளது, அந்தத் திட்டம் வழங்கும் உரிமைகள், திட்டத்துக்குத் தகுதிபெறத் தேவையானவை, திட்டத்துக்கு எப்படி விண்ணப்பம் போடுவது ஆகிய தகவல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இணையப் பதிப்பில், திட்டங்களுக்கான கோரல் படிவங்களுக்கான இணைப்புகளும் கிடைக்கின்றன. கோரல் படிவங்களை அந்தந்த மீன்வளத்துறை உதவி இயக்குநரிடமும் பெறலாம். இளஞ்சிவப்பு வண்ணத்தில் உள்ள பக்கங்கள் பெண்களுக்க்கான சிறப்புத் திட்டங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. நீல வண்ணத்தில் உள்ள பக்கங்கள் மீனவ இளைஞர்களுக்கான சிறப்புத் திட்டங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

அரசு வழங்கும் அனைத்துத் திட்டங்களும் இந்தப் புத்தகத்தில் உள்ளனவா?

மீன்வளத் துறை தொடர்பான முக்கியத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றிய தகவல்களை இந்தப் புத்தகம் தொகுத்து வழங்குகிறது. இவற்றுடன், கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத் ராஜ் துறை, விவசாயம் மற்றும் தோட்டக்கலைத் துறைகள், கல்வித்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றம், வாழ்வாதாரம் உள்ளிட்ட மற்ற அரசுத் துறைகள் வழங்கும் வேறு பல (கிட்டத்தட்ட 200+) நலத் திட்டங்களுக்குக் கடலோரச் சமூகங்களும் தகுதி பெறுகிறார்கள். ஆனால், இந்தச் சிற்றேடு மற்ற துறைகளுடைய திட்டங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதில்லை.

“ஆண்கள்” “இளைஞர்கள்” “பெண்கள்” பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சின்னம் குறிக்கப்பட்ட திட்டப் பக்கங்கள், அந்த பயனாளிகளை நோக்கித் அந்த திட்டம் அவர்களுக்கு ஆனது என குறிக்கிறது

ஆண்கள்

இளைஞர்கள்

பெண்கள்

2. தமிழ் நாட்டில் கடல் சார்ந்த மீன் தொழிலாளர்களுடைய உரிமைகள்

தமிழ் நாட்டில் கடல் சார்ந்த மீன் தொழிலாளர்கள் இந்திய அரசியல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி பல உரிமைகளையும் சலுகைகளையும் பெறுகிறார்கள். இவை பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய அரசுச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பொறுத்தும், கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாடு போன்ற இந்தியா கையெழுத்திட்டுள்ள அல்லது பங்கு பெறுகிற பன்னாட்டு ஒப்பந்தங்கள், மாநாடுகள் மற்றும் உள்ளூர் ஏற்பாடுகளின் அடிப்படையிலும் அமைகின்றன. மீனவர்களுடைய உரிமைகள், கடலோர மற்றும் கடல் சார்ந்த ஆட்சியில் அவர்களுடைய பங்குபற்றிய இந்தியாவின் அணுகுமுறையை, FAOன் பொறுப்பான மீன் பிடித்தலுக்கான நடவடிக்கை விதிமுறைகள் மற்றும் வளங்குன்றா சிறுதர மீன் பிடித்தலைப் பாதுகாக்கும் தன்னார்வ வழிகாட்டுதல்கள் (VGSSF) போன்ற மற்ற பிணைக்காத ஆவணங்கள் வழிநடத்துகின்றன.

உரிமைகள் மற்றும் சலுகைகளில் சில:

1. வாழ்வாதார உரிமை

அரசியல் சட்டத்தின் 21வது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளபடி, கடல் சார்ந்த மீனவர்கள் இந்த உரிமையின் கீழ், கடல் மற்றும் கடலோரப் பகுதிகளாகிய வளங்களை மீன் பிடிக்கவும் அது தொடர்பான செயல்பாடுகளுக்கும் அணுகலாம், பயன்படுத்தலாம், விலக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் இவர்களுக்குத் தடங்கல் விளைவிக்கக்கூடாது. இதன்மூலம், மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நடத்தாதபடி தன்னிச்சையாகவும் சட்டத்துக்கு எதிராகவும் குறுக்கிடுகிறவர்களிடமிருந்து மீனவர்களைப் பாதுகாக்கும் கடமை அரசுக்கு உண்டு.

2. சமூகப் பாதுகாப்பு உரிமை

கடல் சார்ந்த மீனவர்கள், குறிப்பாக, சிறுதர மீன் தொழிலாளர்கள் பல நேரங்களில் குறிப்பிடக்கூடிய ஒடுக்கப்படுதலையும் பிற சமூக, பொருளாதாரத் தடைகளையும் சந்திக்கிறார்கள். தமிழ்நாடு மீனவர் மற்றும் மீன் பிடித்தல் மற்றும் பிற ஒருங்கிணைந்த செயல்பாடுகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2007ன்படி, நலிந்த குழுக்களைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அந்தப் பணியுடன் இணைந்த 'கடற்கரைப் பணியாளர்கள்' ஒன்றிய மற்றும் மாநிலச் சமூகப் பாதுகாப்புப் பலன்களுக்குத் தகுதி பெறுவார்கள். எடுத்துக்காட்டாக, சேமிப்பு மற்றும் உதவி, ஓய்வூதிய மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள், வாழ்வாதார இழப்பு அல்லது சொத்துக்குச் சேதம் ஏற்பட்டால் போதுமான அளவு இழப்பீடு பெறுதல் உள்ளிட்ட பல திட்டங்கள் தேவையான நேரத்தில் அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்றன.

3. நல மற்றும் பாதுகாப்பு உரிமை

மீனவர்கள் ஆபத்தான, உடல் அளவில் மிகுந்த தேவையைக் கோரக்கூடிய சூழல்களில் பணியாற்றுகிறார்கள், பல நேரங்களில் இவர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, உயிருக்கு அச்சுறுத்தலை விளைவிக்கக்கூடிய சூழல்களைச் சந்திக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சீற்றமான கடலில் மீன் பிடித்தல், மோசமான வானிலையைச் சந்தித்தல், கடல் எல்லையின் அருகிலுள்ள நாடுகளிடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், படகில் போதாத பாதுகாப்புக் கருவிகள் போன்றவை. இதனால், மீனவர்கள் பல்வேறு உள்ளூர்ச் சட்டங்களின் வழியாக மருத்துவப் பராமரிப்பு, நலப் பரிசோதனைகள், மீன் பிடித்தலால் ஏற்படக்கூடிய இறப்பு மற்றும் ஊனத்துக்கான இழப்பீடு போன்றவற்றுக்குத் தகுதி பெறுவதுடன், பாதுகாப்பான மீன் பிடித்தல் செயல்பாடுகளைப் பற்றிய தகவல்களை அணுகவும் உரிமை பெறுகிறார்கள்.

4. கடல் சார்ந்த வளங்களை மேலாண்மை செய்தலில் பங்கேற்கும் உரிமை

கடற்கரைகளும் கடலும் நலமாக இருப்பது, அவை வளங்குன்றாத மற்றும் சமமான முறையில் பயன்படுத்தப்படுவதைச் சார்ந்து மீனவர்களுடைய உயிர்களும் வாழ்வாதாரங்களும் இருப்பதால், கடல் சார்ந்த வளங்களை மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாத்தலில் பங்கேற்கும் உரிமை மீனவர்களுக்கு உண்டு. தமிழ் நாட்டில் கடல் சார்ந்த வள மேலாண்மை தொடர்பான விஷயங்களில் அரசு அலுவலர்களுடன் ஈடுபடுவதற்கான தளங்களில் சில, மீனவர் கூட்டுறவு அமைப்புகள், மீனவர் சங்கங்கள், கடற்கரை மேலாண்மைக்கான மாவட்ட நிலைக் குழுக்கள் மற்றும் பிற இணை மேலாண்மை மற்றும் அறிவுறுத்தல் வாரியங்கள்.

5. கல்வி உரிமை

மீனவர்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி உரிமை உண்டு, அவர்களுக்குச் சமமான கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். கல்வி உதவித் தொகைகள், பள்ளிகள், கல்லூரிகள், மீன்வள ஆய்வு அமைப்புகளில் இவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுதல் போன்றவை இதில் இடம்பெறும்.

6. தகவல் உரிமை

கூடுதலாக, தங்களுடைய வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் அரசுக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெறும் உரிமை மீனவர்களுக்கு உண்டு. இதன் பொருள், வளங்கள், வாழ்விடங்கள் மற்றும் கடற்கரையோரப் பகுதி மேலாண்மை நிலையைப்பற்றி மீனவர்களுக்குத் தகவல் வழங்கும் கடமை பொருந்தும் அலுவலர்களுக்கு உண்டு. தீர்மானம் எடுத்தவர்கள் தாங்கள் எடுத்த தீர்மானங்களுக்குப் பொறுப்பேற்க இது உதவும்.

தமிழ்நாட்டில் உள்ள கடல் சார்ந்த மீனவர்களுக்கு முறையான, சமநிலையான மற்றும் வளங்குன்றாத வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான அடிப்படையை இந்த உரிமைகளும் சலுகைகளும் அமைக்கின்றன.

குறிப்பாக, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக் கொள்கைக் குறிப்பு 2022-23, தமிழ்நாட்டில் மீன்வளத் துறையின் மிகப்பெரிய நோக்கங்களை அறிமுகப்படுத்துகிறது.
அவை பின்வருமாறு:

மீனவர் நலன்

- தமிழ் நாட்டு மீனவர்களுடைய பாரம்பரிய மீன் பிடித்தல் உரிமைகள் மற்றும் நலனைப் பாதுகாத்தல்
- பல நலத் திட்டங்களின் வழியாக, மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- மீனவப் பெண்களுக்கு வாழ்வாதாரச் செயல்பாடுகளில் ஆற்றல் அளித்தல், மீனவக் கைம்பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்துதல்
- இ-ஆளுமை வழியாக, வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நல நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தலில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்
- மீனவர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் திறமையை வளர்த்தல்
- மீன்வளப் பிரிவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்ப மேம்படுத்தல்கள்

பொருளாதார ஆற்றல் அளித்தல்

- நாட்டின் உட்பகுதி, உவர் நீர் பகுதி மற்றும் கடல் வளங்களில் மீன்களை வளர்த்தலில் செயல்திறனை மேம்படுத்துதல்
- அரசு மீன் பண்ணை போன்ற உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்,
- மீன்பிடி துறைமுகங்கள் (FHகள்)/மீன் இறங்கும் மையங்கள் (FLCகள்), குளிர் சங்கிலி, மதிப்பு கூட்டல், முன் மற்றும் பின் இணைப்புகள்
- மீன் வளர்த்தல் வழியாகக் கிராமப்புரங்களில் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்
- மீன் விதைத் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையிலான இடைவெளியை நிரப்புதல்

- உயர் மதிப்பு மீன் மற்றும் மீன்வளப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

சுற்றுச்சூழல் பாதுகாப்புகள்

- மீன்வளங்களைப் பாதுகாத்தல், கையிருப்பை மேம்படுத்துதல் மற்றும் பொருந்தும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வழியாக அவற்றை மேலாண்மை செய்தல்
- தமிழ்நாட்டில் மீன் வளங்கள் மற்றும் அவற்றின் சாத்தியத்தை மறு மதிப்பீடு செய்தல்

இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, மீன்வளத்துறை மீனவச் சமூகங்களுக்குப் பல சலுகைகளைக் கொண்டுள்ளது. கீழுள்ள பிரிவுகளில் அவை பட்டியலிடப்பட்டுள்ளன.

3. அறிமுகம்

தமிழ் நாட்டில் மீனவர் நலத் திட்டங்கள் : ஓர் அறிமுகம்

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகவல்கள்	தொகை (ரூபாயில்)	
		மீனவர் நலன்		
1	விபத்து நிவாரணம்	i. விபத்தினால் மரணம்	2,00,000	
		ii. இரண்டு கைகள் இழப்பு	2,00,000	
		iii. இரண்டு கால்கள் இழப்பு	2,00,000	
		iv. ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	1,00,000	
		v. இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு	2,00,000	
		vi. மேற்கண்டவை நீங்கலாக, மிகப் பெரிய காயங்களால் உடல் உறுப்பு இழப்பு	50,000	
2	மீன் பிடிக்கச் சென்ற மீனவர் காணாமல் போதல்		2,00,000	
3	இயற்கை மரணம்		15,000	
4	இறுதிச் சடங்குச் செலவுகள்		2500	
5	உறுப்பினருடைய மகன் அல்லது மகளுடைய கல்விக்கு உதவி		**ஆண்**	**பெண்**
		i. 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் - வீட்டிலிருந்து சென்று படித்தவர் மற்றும் விடுதியில் தங்கிப் படித்தவர்	1250	1500

5	உறுப்பினருடைய மகன் அல்லது மகளுடைய கல்விக்கு உதவி	ii. 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் - வீட்டிலிருந்து சென்று படித்தவர் மற்றும் விடுதியில் தங்கிப் படித்தவர்	1750	2000
		iii. ITI & பாலிடெக்னிக் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	1250	1750
		iii. ITI & பாலிடெக்னிக் - விடுதியில் தங்கிப் படித்தவர்	1450	1950
		iv. v. இளங்கலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	1750	2250
		iv. இளங்கலைப் பட்டம் - விடுதியில் தங்கிப் படித்தவர்	2000	2500
		v. முதுநிலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	2250	2750
		v. முதுநிலைப் பட்டம் - விடுதியில் தங்கிப் படித்தவர்	3250	3750
		vi. தொழில் வல்லுனர் படிப்புகள் (சட்டம், பொறியியல், மருத்துவம் போன்றவை) - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	2250	2750
		vi. தொழில் வல்லுனர் படிப்புகள் (சட்டம், பொறியியல், மருத்துவம் போன்றவை) - விடுதியில் தங்கிப் படித்தவர்	4250	4750
		vii. தொழில் வல்லுனர் படிப்புகளில் முதுநிலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	4250	4750
		viii. தொழில் வல்லுனர் படிப்புகளில் முதுநிலைப் பட்டம் - விடுதியில் தங்கிப் படித்தவர்	6250	6750
6	திருமண உதவி		3000	5000
7	குழந்தை பிறப்பு அல்லது கரு கலைதல் அல்லது கரு அழிப்பு	i. குழந்தை பிறப்பு		6000
		ii. கரு கலைதல் மற்றும் அழிப்பு		3000

8	கடல் சார்ந்த மீனவக் குடும்பங்களுக்கான உதவித் திட்டம் (NFSRS)		3000
9	கடல் சார்ந்த மீனவப் பெண்களுக்கான உதவித் திட்டம்		4500
10	மாநில மீன் பிடித்தல் தடைக் காலகட்ட உதவி		6000
11	மாநில மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்ட உதவி		6000
12	மீனவ மக்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்	i. இறப்பு/நிரந்தர முழு ஊனம்	5,00,000
		ii. நிரந்தரப் பகுதியளவு ஊனம்	2,50,000
		iii. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல்	10,000
13	மீன் பிடித்தல் உதவியின்போது காணாமல் போதல்		2,00,000
14	அருகிலுள்ள நாடுகளால் பிடிக்கப்பட்ட கடல் சார்ந்த மீனவர்களுக்கு அன்றாட உதவி		ஒரு நாளுக்கு 250
15	இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளால் இறந்த / காயமடைந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி	i. மீன் பிடிக்கும்போது அல்லது மீன் பிடித்தபின் இறப்பு, விபத்து இறப்பு நீங்கலாக	3,00,000
		ii. குடும்பத்தின் ஒரே சம்பாதிக்கும் நபருடைய இறப்பு	5,00,000
16	வீடு கட்டுதல்	i. ஒன்றியத் திட்டம்	1,20,000
		ii. மாநிலத் திட்டம்	1,70,000
17	குழாய்க் கிணறு - குடிநீர் வசதி		50,000
18	மீனவர்களுக்கான சமூகக் கூடம்		4,00,000

கடல் சார்ந்த மீனவர் சொத்துகள்			
19	பாரம்பரியப் படகை மோட்டார்மயமாக்கல்	i. மீன் பிடித்தல் கருவி மற்றும் புரொபெல்லர் உள்பட	1,20,000
		ii. மீன் பிடித்தல் கருவி மற்றும் புரொபெல்லர் இல்லாமல்	48,000
20	பாரம்பரிய/சிறுதர மீனவர்களுக்கு (FRP படகு) உதவி, 10m OALவரை		4,00,000
21	புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலைப் படகுகளை வாங்குதல்		60,00,000
22	படகுகள் & கருவிகளை வாங்குதல் - உள்நாட்டுப் பகுதி மீன் பிடித்தல்		1,00,000
23	வரி விலக்கு அளிக்கப்பட்ட உயர் விரைவு டீசல் (HSD) தமிழ்நாடு	i. மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளுக்கு	ஆண்டுக்கு 4000 லிட்டர்
24	வரி விலக்கு அளிக்கப்பட்ட உயர் விரைவு டீசல் (HSD) தமிழ்நாடு	ii. இயந்திரப் படகுகளுக்கு	ஆண்டுக்கு 18000 லிட்டர்
25	பாரம்பரியப் படகுகளுக்கு மானிய விலையில் தொழில்துறை மண்ணெண்ணெய்		ஆண்டுக்கு 3400 லிட்டர்
26	கடலில் மீனவர் பாதுகாப்பு		2,00,000
27	பாதுகாப்பான, மீன் & பனிக்கட்டியை வைத்திருக்கும் குளிர்காப்பு பெட்டிகள்		25,000
28	கூண்டு மீன் வளர்ப்பு		5,00,000

29	கடற்பாசி வளர்ப்பு		1000
30	சிப்பி வளர்ப்பு		15,000
31	ஆளி வளர்ப்பு		25,00,000
உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்த்தல்			
32	நன்னீர் / உவர் நீர் இறால் குஞ்சு பொரிப்பகங்கள்		50,00,000
33	புதிய மீன் குளம்/ தொட்டி		7,00,000
34	ஏற்கெனவே உள்ள குளங்கள்/ தொட்டிகளைப் புதுப்பித்தல்		3,50,000
35	மீன்/இறால் விதை, உணவு, புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள குளங்கள்/ தொட்டிகளுக்கு உரம் வாங்குதல்	i. மீன் வளர்த்தல்	1,50,000
		ii. நன்னீர் இறால்/ ‘ட்ரவுட்’ வளர்த்தல்	2,50,000
36	மீன் விதைக் குஞ்சு பொரிப்பகங்களைக் கட்டமைத்தல்		25,00,000
37	ரேஸ்வே/நிரந்தரப் பண்ணைப் பிரிவு - நீர்வாழ் உயிரினம் வளர்த்தல்		2,00,000
38	நிலம் சார்ந்த பிரிவுகள், குளிர் நீர் மீன் வளர்த்தல்		1,00,000
39	மீன் விதை வளர்க்கும் பிரிவுகள் - உள்நாட்டுப் பகுதிகளில் மீன் வளர்த்தல்		6,00,000

40	இறங்கும் மையங்கள், வலையைச் சரிசெய்யும் பந்தல் - உள்நாட்டுப் பகுதிகளில் மீன் வளர்த்தல்		4,00,000
41	நீர் தேங்கியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்		5,00,000
42	நீர்த்தேக்கங்களை மேம்படுத்துதல்		20,000,000
43	நீர்த்தேக்கங்கள்/திறந்த நீர்நிலைகளுக்கு உள்ளீடுகளுடன் கூண்டு/ அடைப்பிடங்கள்		3,00,000
44	பீல்ஸ் / ஈர நிலத்தில் கையிருப்பு மீன் ஃபிங்கர்லிங்க்ஸ்		2,50,000
45	நீர் மறுசுழற்சிமுறை மீன் வளர்ப்பு (RAS)	i. குறைந்த விலை RAS	15,00,000
		ii. நடுத்தர அளவு RAS	50,00,000
46	மீன் தீவன உற்பத்தி ஆலை		1,000,000
47	சூத்திரத்தின்படி உருவாக்கப்பட்ட மீன் தீவன உற்பத்தி ஆலை		20,000,000
மீன்களைச் சந்தைப்படுத்துதல்			
48	பனி ஆலை அல்லது குளிர்ச் சேமிப்பகம், பனி ஆலை மற்றும் குளிர்ச் சேமிப்பகம்		ஆலைக்கு 100,00,000 டன்னுக்கு 2,50,000
49	சில்லறை விற்பனை மீன் கடை/கியோஸ்க்		1,000,000
50	பனிக்கட்டிப் பெட்டியுடன் ஆட்டோ ரிக்ஷா		200,000

51	பனிக்கட்டிப் பெட்டியுடன் மோட்டார்சைக்கிள்/ மிதிவண்டி	i. மோட்டார்சைக்கிள்	60,000
		ii. மிதிவண்டி	3,000
52	சில்லறை விற்பனை மீன் சந்தை	i. 10 சில்லறை விற்பனைக் கடைகளுடன் கூடிய மீன் சந்தை	100,00,000
		ii. 20 சில்லறை விற்பனைக் கடைகளுடன் கூடிய மீன் சந்தை	200,00,000
		iii. 50 சில்லறை விற்பனைக் கடைகளுடன் கூடிய மீன் சந்தை	500,00,000
53	TNFDC/TAFCOFED - 'மீன்கள்' மீன் கடை உரிமை அமைப்பைத் திறத்தல்		
54	ஏற்கெனவே உள்ள பனி ஆலை அல்லது குளிர்ச்சேமிப்பகத்தைப் புதுப்பித்தல்/ நவீனமயமாக்குதல்		1,50,000/Tonne, 60,00,000/Plant
55	குளிர்பதன வசதி கொண்ட டிரக்/பெட்டி	குளிர்பதன வசதி கொண்ட 10 டன் டிரக்	25,00,000
56	காப்பிடப்பட்ட டிரக்/பெட்டி	i. காப்பிடப்பட்ட 10 டன் டிரக்	20,00,000
		ii. காப்பிடப்பட்ட 6 டன் டிரக்	15,00,000
57	ஒருங்கிணைக்கப்பட்ட குளிர்ச் சங்கிலி சேமிப்பகம்/ போக்குவரத்து அமைப்பு		50,000,000
58	மீன் விற்பனைக்கான கடன்	5 மீனவப் பெண்கள் கொண்ட குழுவுக்கு	75,000

4.1
மீனவர் நலத்திட்டங்கள்

1.

மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள கால கட்டத்தின் போது மாநில நிதி உதவி

திட்டத்தைப்பற்றி

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் (ராஜக்கமங்கலந்துறை தொடங்கி நீரோடிவரை) ஜூன் 1 முதல் ஜூலை 31வரையும் 61 நாள் மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்படுகிறது. இந்த மீன் பிடித்தல் தடைக் கால கட்டத்தின் போது, கடற்கரையோர மாவட்டங்களில் உள்ள கடல் சார்ந்த மீனவக் குடும்பங்களுடைய வாழ்வாதாரத்துக்கு இழப்பு ஏற்படுவதால், அதைத் தணிக்க, மீனவக் குழுவினர் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 6000 வழங்கும் ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

பகுதி	தடைக் காலகட்டம்
பழவேற்காடு முதல் கன்னியாகுமரி வரை	ஏப்ரல், ஜூன்
கன்னியாகுமரி (ராஜக்கமலந்துறை முதல் நீரோடி வரை)	ஜூன், ஜூலை

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் முழு நேர, செயலில் உள்ள மீனவராக இருக்க வேண்டும்
2. விண்ணப்பம் செய்பவர் செயலில் உள்ள உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம்/கூட்டமைப்பு/வேறு பதிவு செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டும்
3. விண்ணப்பம் செய்பவர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் (BPL) இருக்கவேண்டும், 18 வயதிலிருந்து 60 வயதுக்குள் இருக்க வேண்டும்

உரிமை

இதற்கான காப்பீடு	தொகை
தடைக் காலகட்ட உதவி. இந்தத் தொகை, விண்ணப்பம் செய்பவருடைய வங்கிக் கணக்குக்கு NEFT வழியாக அனுப்பப்படும்	கடல் சார்ந்த மீனவக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ 6000/-

எப்படி விண்ணப்பம் செய்வது

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

2.

மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்ட மாநில உதவி

திட்டத்தைப்பற்றி

மீன் பிடித்தல் குறைவாக உள்ள மாதங்களில், கடல் சார்ந்த மீன் பிடித்தல் செயல்பாடுகளில் ஈடுபட்டுவரும் கடல் சார்ந்த மீனவக் குடும்பங்களுக்கு ஏற்படும் வாழ்வாதார இழப்பைத் தணிக்க, தமிழ் நாட்டு அரசு கடல் சார்ந்த மீனவக் குடும்பங்களுக்கு உதவி வழங்குகிறது.

பகுதி	மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்டம்
திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரை	அக்டோபர், நவம்பர், டிசம்பர்
தூத்துக்குடி, திருநெல்வேலி	ஏப்ரல், மே, ஜூன்
கன்னியாகுமரி	ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் முழு நேர, செயலில் உள்ள மீனவராக இருக்க வேண்டும்
2. விண்ணப்பம் செய்பவர் செயலில் உள்ள உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம்/கூட்டமைப்பு/வேறு பதிவு செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டும்
3. விண்ணப்பம் செய்பவர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் (BPL) இருக்கவேண்டும், 18 வயதிலிருந்து 60 வயதுக்குள் இருக்க வேண்டும்

உரிமை

இதற்கான காப்பீடு	தொகை
மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்ட உதவி. இந்தத் தொகை, விண்ணப்பம் செய்பவருடைய வங்கிக் கணக்குக்கு NEFT வழியாக அனுப்பப்படும்	கடல் சார்ந்த மீனவக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ 6000/-

எப்படி விண்ணப்பம் செய்வது?

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

3.

கடல் சார்ந்த மீனவப் பெண்களுக்கான மாநிலச் சேமிப்பு மற்றும் உதவித் திட்டம்

திட்டத்தைப்பற்றி

இந்தத் திட்டம் கடல் சார்ந்த மீனவப் பெண்களுக்கான மாநிலத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென மாநில அரசு ரூ 3,000 பங்களிக்கிறது. மீனவப் பெண்களின் பங்களிப்பு உள்பட, ரூ 4,500 மீன் பிடித்தல் குறைவாக உள்ள மாதங்களின் போது விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் முழு நேர, செயலில் உள்ள மீனவப் பெண்ணாக இருக்க வேண்டும்
2. விண்ணப்பம் செய்பவர் செயலில் உள்ள உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம்/கூட்டமைப்பு/வேறு பதிவு செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டும்
3. விண்ணப்பம் செய்பவர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் (BPL) இருக்கவேண்டும், 18 வயதிலிருந்து 60 வயதுக்குள் இருக்க வேண்டும்
4. விண்ணப்பம் செய்யும் மீனவர்கள் ஒவ்வோர் ஆண்டும் மீன் பிடிக்கும் காலகட்டத்தின் போது 9 மாத காலகட்டத்தில் ரூ 1500/-ஐத் தங்களுடைய பங்களிப்பாகச் சேமிக்க வேண்டும். ஒரு மாதத்தில் அல்லது இரண்டு மாதங்களில் மொத்தமாகப் பங்களித்தலைத் தவிர்க்கலாம்.

உரிமை

இதற்கான காப்பீடு	தொகை
மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள/ மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்ட உதவி. ஒவ்வோர் ஆண்டும், திரட்டப்பட்ட தொகையாகிய ரூ 4500/- பதிவு செய்துகொண்ட மீனவர்களுக்கு வழங்கப்படும். இந்தத் தொகை, மீன் பிடித்தல் குறைவாக உள்ள 3 மாதங்களின்போது 3 சமமான தவணைகளில் வழங்கப்படும்.	மீனவப் பெண்ணின் பங்கு: ரூ 1500/- அரசுப் பங்கு: ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மீனவருக்கும் ரூ 3000/-

எப்படி விண்ணப்பம் செய்வது?

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன: https://www.fisheries.tn.gov.in/includes/assets/pdf/Start-A-Business/Welfare_Schemes.pdf

4.

கடல் சார்ந்த மீனவக் குடும்பங்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் உதவித் திட்டம் (NFSRS)

திட்டத்தைப்பற்றி

மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள காலகட்டங்களின் போது மீனவர்களுடைய வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் இழப்பைத் தணிக்க, மாநிலத் திட்டங்களுடன், ஒன்றிய அரசு கடலோர மாவட்டங்களில் உள்ள கடல் சார்ந்த மீனவக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ 3000/- உதவி வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துகிறது.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் முழு நேர, செயலில் உள்ள மீனவராக இருக்க வேண்டும்
2. விண்ணப்பம் செய்பவர் செயலில் உள்ள உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம்/கூட்டமைப்பு/வேறு பதிவு செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டும்
3. விண்ணப்பம் செய்பவர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் (BPL) இருக்கவேண்டும், 18 வயதிலிருந்து 60 வயதுக்குள் இருக்க வேண்டும்
4. விண்ணப்பம் செய்யும் மீனவர்கள் ஒவ்வோர் ஆண்டும் மீன் பிடிக்கும் காலகட்டத்தின்போது 9 மாத காலகட்டத்தில் ரூ 1500/-ஐத் தங்களுடைய பங்களிப்பாகச் சேமிக்க வேண்டும். ஒரு மாதத்தில் அல்லது இரண்டு மாதங்களில் மொத்தமாகப் பங்களித்தலைத் தவிர்க்கலாம்.

உரிமை

உரிமை	தொகை
மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள/மீன் பிடித்தல் குறைவாக உள்ள காலகட்ட உதவி. ஒவ்வோர் ஆண்டும், திரட்டப்பட்ட தொகையாகிய ரூ 4500/- பதிவு செய்துகொண்ட மீனவர்களுக்கு வழங்கப்படும். இந்தத் தொகை, மீன் பிடித்தல் குறைவாக உள்ள/மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள 3 மாதங்களின் போது 3 சமமான தவணைகளில் வழங்கப்படும்.	மீனவர் பங்கு: ரூ 1500/- அரசுப் பங்கு: ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மீனவருக்கும் ரூ 3000/-

எப்படி விண்ணப்பம் செய்வது?

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/includes/assets/pdf/Start-A-Business/Welfare_Schemes.pdf

5.

வரி விலக்கு அளிக்கப்பட்ட உயர் விரைவு டீசல் (HSD) வழங்கல் தமிழ்நாடு

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டு அரசு, பதிவு செய்து கொண்ட, இயந்திர மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசலை வழங்குகிறது.

உரிமை

படகு	இதுவரை
இயந்திரப் படகுகள்	ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு படகுக்கும் 18000 லிட்டர்கள் (10 மாதங்களுக்கு மாதந்தோறும் 1800 லிட்டர்கள்)
மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள்	ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு படகுக்கும் 4000 லிட்டர்கள் (மாதந்தோறும் 300-350 லிட்டர்கள்)
நிதி அளித்தல் வகை: மாநில அரசுப் பங்கு: 25%, மீனவர் பங்கு: 75%	

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. 20m OAL ஐவிடக் குறைவான மீன்பிடி படகின் உரிமைச் சான்றிதழ்
2. ReALCraft ன்கீழ் பதிவுச் சான்றிதழ்
3. மீன் பிடித்தல் உரிமம் மற்றும்
4. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

எப்படி விண்ணப்பம் செய்வது?

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

6.

பாரம்பரியப் படகுகளுக்கு மானிய விலையில் தொழில்துறை மண்ணெண்ணெய் வழங்கல்

திட்டத்தைப்பற்றி

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மீன்பிடி படகுகளுக்கு அரசு தொழில்துறை மண்ணெண்ணெயை மானிய விலையில் வழங்குகிறது. மோட்டார் பொருத்தப்பட்ட ஒவ்வொரு நாட்டுப் படகுக்கும் ஆண்டுக்கு 3400 லிட்டர் என்ற அளவில் இது வழங்கப்படுகிறது.

உரிமை

படகு	இதுவரை
தொழில்துறை மண்ணெண்ணெய் லிட்டருக்கு ரூ 25 என்ற மானிய விலையில் ஒதுக்கப்படுகிறது	ஒவ்வொரு படகுக்கும் மாதத்துக்கு 300 லிட்டர் ஒவ்வொரு படகுக்கும் ஆண்டுக்கு 3400 லிட்டர்

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. எரிபொருள் கணக்குப் புத்தகம்
2. 20m OAL ஐவிடக் குறைவான படகின் உரிமைச் சான்றிதழ்
3. ReALCraft ன்கீழ் பதிவுச் சான்றிதழ்
4. மீன் பிடித்தல் உரிமம்
5. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

எப்படி விண்ணப்பம் செய்வது?

1. உதவிக்கு, கிராம சாகர்மித்ரா-வைச் சந்தித்துப் பேசுங்கள்
2. விண்ணப்பமானது மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

7.

மீனவ மக்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

திட்டத்தைப்பற்றி

இறந்த மீனவர்கள் அல்லது நிரந்தர அல்லது பகுதியளவு ஊனத்தைக் கொண்ட மீனவர்களுக்கு மருத்துவமனைச் செலவுகளுக்கென PMMSY திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படுகிறது. இந்தக் காப்பீடு 12 மாதங்களுக்கு அமையும்.

தகுதி

மீனவர்/மீனவப் பெண் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துகொண்ட, உரிமம் பெற்ற/பதிவு செய்த மீனவர்கள் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட மீனவர்கள்

உரிமை

ஒவ்வொரு மீனவருக்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ 20.34/- காப்பீட்டுப் பிரீமியம் தொகை அரசால் செலுத்தப்படுகிறது.

இதற்கான காப்பீடு	காப்பீடு இதுவரை
இறப்பு அல்லது நிரந்தர முழு ஊனம்	5,00,000
நிரந்தரப் பகுதியளவு ஊனம்	2,50,000
மருத்துவமனைச் செலவுகள்	10,000

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

1. மீனவர்/மீனவப் பெண் கூட்டுறவுச் சங்கங்கள்
2. மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes
காப்பீட்டுப்படிவம்: http://www.fishcopfed.in/OrientalInsurance.pdf

8.

காணாமல் போன மீனவர்களுடைய குடும்பங்களுக்கு அன்றாட உதவி

திட்டத்தைப்பற்றி

கடலில் மீன் பிடிக்கும்போது காணாமல் போகும் மீனவர்களுடைய குடும்பத்தினருக்கு இரண்டு ஆண்டுகள் வரை அல்லது அவர்கள் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்/ தமிழ்நாடு மீனவர் நல வாரியம் வழியாகப் பணப் பலன்களைப் பெறும் வரை மாநில அரசு நாள்தோறும் ரூ 350 (மாதம் ரூ. 10,500) உதவி அளிக்கிறது.

உரிமை

இதற்கான உதவி	தொகை
கடலில் காணாமல் போன மீனவர்களுடைய குடும்பத்தினருக்கு அன்றாட உதவி	நாள்தோறும் ரூ 350, மொத்தத் தொகை ரூ 2 லட்சம் வரை

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் மூலப் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. காவல்துறை FIRன் பிரதி
4. காணாமல் போன மீனவரை இன்னும் கண்டறிய இயலவில்லை என்று தொடர்புடைய காவல் நிலையம் வழங்கும் கடிதம்
5. குடும்ப உறுப்பினர் சான்றிதழ்
6. விண்ணப்பம் செய்தவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மற்ற சட்ட வாரிசுகள் வழங்கும் கடிதம், ரூ 20/- முத்திரைத் தாளில் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு மட்டும்)
7. இழப்பை ஈடு செய்ய உறுதியளிக்கும் பத்திரம் (காணாமல் போன மீனவர் கண்டறியப்படும் போது, அவருக்கு ஒதுக்கப்பட்ட உதவியைத் திரும்பச் செலுத்துவதற்கான ஒப்புதல் கடிதம்)
8. CM உதவி நிதி மற்றும் பிற செயலில் உள்ள அரசுத் திட்டங்களிலிருந்து எந்த உதவியும் ஒதுக்கப்படவில்லை என்பது பற்றிய ADF / வருவாய்த் துறைச் சான்றிதழ்
9. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://tnfwb.tn.gov.in/

9.

அருகிலுள்ள நாடுகளால் பிடிக்கப்பட்ட கடல் சார்ந்த மீனவர்களுக்கு அன்றாட உதவி

திட்டத்தைப்பற்றி

மீன் பிடிக்கும்போது இலங்கை மற்றும் அருகிலுள்ள மற்ற நாடுகளால் பிடிக்கப்படும் மீனவர்களுடைய குடும்பங்களை அரசு ஆதரிக்கிறது, பிடிக்கப்பட்ட மீனவருடைய குடும்பத்துக்கு நாள்தோறும் ரூ 250 உதவித்தொகையை (அலவன்ஸ்) வழங்குகிறது. இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் வழியாகச் செயல்படுத்தப்படுகிறது.

உரிமை

இதற்கான உதவி	தொகை
பிடிக்கப்பட்ட மீனவர்களுடைய குடும்பங்களுக்கு அன்றாட உதவித்தொகை (அலவன்ஸ்)	நாள்தோறும் ரூ 250

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் மூலப் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. காவல்துறை FIRன் பிரதி
4. காணாமல் போன மீனவரை இன்னும் கண்டறிய இயலவில்லை என்று தொடர்புடைய காவல் நிலையம் வழங்கும் கடிதம்
5. குடும்ப உறுப்பினர் சான்றிதழ்
6. விண்ணப்பம் செய்தவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மற்ற சட்ட வாரிசுகள் வழங்கும் கடிதம், ரூ 20/- முத்திரைத் தாளில் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு மட்டும்)
7. இழப்பை ஈடு செய்ய உறுதியளிக்கும் பத்திரம் (காணாமல் போன மீனவர் கண்டறியப்படும் போது, அவருக்கு ஒதுக்கப்பட்ட உதவியைத் திரும்பச் செலுத்துவதற்கான ஒப்புதல் கடிதம்)
8. CM உதவி நிதி மற்றும் பிற செயலில் உள்ள அரசுத் திட்டங்களிலிருந்து எந்த உதவியும் ஒதுக்கப்படவில்லை என்பது பற்றிய ADF / வருவாய்த் துறைச் சான்றிதழ்
9. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://tnfwb.tn.gov.in/index.php/User/missing

10.

இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளால் இறந்த / காயமடைந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி

திட்டத்தைப்பற்றி

பாக் விரிகுடாவின் பாரம்பரிய நீர்ப்பகுதிகளில் மீன் பிடிக்கின்ற, கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டில் இறந்தால், அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவுவதற்கென அரசாங்கம் கருணை அடிப்படையில் முதல்வர் பொது உதவி நிதியிலிருந்து ரூ 3 லட்சம் உதவித்தொகையாக வழங்குகிறது.

உரிமை

இதற்கான உதவி	தொகை
மீன் பிடிக்கும் போது அல்லது மீன் பிடித்த பின் இறப்பு, விபத்து இறப்பு நீங்கலாக	3,00,000
குடும்பத்தின் ஒரே சம்பாதிக்கும் நபருடைய இறப்பு	5,00,000
கடலில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டால் மிகப் பெரிய காயங்கள்	50,000
கடலில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டால் சிறிய காயங்கள்	20,000

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. ADFன் விரிவான இறப்பு அறிக்கை
2. நல வாரிய அடையாள அட்டையின் மூலப் பிரதி
3. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
4. காவல்துறை FIR ன் பிரதி
5. இறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி
6. பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ்
7. பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ் நிலுவையில் இருந்தால் (இறுதி அறிக்கை)
8. சட்ட வாரிசுச் சான்றிதழின் மூலப் பிரதி
9. விண்ணப்பம் செய்தவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மற்ற சட்ட வாரிசுகள் வழங்கும் கடிதம், ரூ 20/- முத்திரைத் தாளில் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு மட்டும்)
10. CM உதவி நிதி மற்றும் பிற செயலில் உள்ள அரசுத் திட்டங்களிலிருந்து எந்த உதவியும் ஒதுக்கப்படவில்லை என்பது பற்றிய ADF / வருவாய்த் துறைச் சான்றிதழ்
11. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://tnfwb.tn.gov.in/

கோருதல் படிவம்: https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20death%20form%207.pdf

11.

இறுதிச் சடங்கு உதவி

திட்டத்தைப்பற்றி

மீனவர்களுடைய இறுதிச் சடங்குக்கென, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை இது.

தகுதி

1. 18 முதல் 65 வயதுவரை உள்ள, நாட்டின் உட்பகுதி மற்றும் கடல் சார்ந்த மீனவர்கள் அல்லது மீன் பிடித்தலுடன் இணைந்த செயல்பாடுகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் TNFWBல் பதிவு செய்து கொள்ளத் தகுதி பெறுவார்கள்.
2. மீன் பிடித்தல், உலர்த்துதல், மீனை விற்றல், படகு கட்டுதல் உள்ளிட்ட மீன் பிடித்தலுடன் இணைந்த மற்ற செயல்பாடுகளில் ஈடுபடும் மீன் தொழிலாளர்கள், பதப்படுத்தும் தொழிலாளர்கள், தூய்மைப்படுத்துதல், தரம் பிரித்தல், ஏலம் போடுதல், பதப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதலில் பொதியாக்குதலில் ஈடுபடும் பணியாளர்களும் இதில் சேர்க்கப்படுகிறார்கள்.
3. TNFWBல் பதிவு செய்துகொள்ள, ரேஷன் கார்டு அல்லது வயது, வசிப்பிடம், குடும்ப உறுப்பினர்களுக்குச் சான்று வழங்க மாநில/ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த ஆவணமும் கடவுச்சீட்டு அளவுப் புகைப்படம் ஒன்றும் தேவை.

உரிமை

இதற்கான உதவி	தொகை
இறுதிச் சடங்கு உதவி	2500

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. இறப்புச் சான்றிதழ் பிரதி
4. சட்ட வாரிசுச் சான்றிதழ் பிரதி
5. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

கோருதல் படிவம்:
https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20funeral%20form%208.pdf
https://tnfwb.tn.gov.in/

12.

இயற்கை இறப்பு உதவி

திட்டத்தைப்பற்றி

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இயற்கை இறப்பு உதவித்தொகை இது.

உரிமை

இதற்கான உதவி	தொகை
இயற்கை இறப்பு	15000

தகுதி

1. 18 முதல் 65 வயதுவரை உள்ள, நாட்டின் உட்பகுதி மற்றும் கடல் சார்ந்த மீனவர்கள் அல்லது மீன் பிடித்தலுடன் இணைந்த செயல்பாடுகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் TNFWBல் பதிவு செய்து கொள்ளத் தகுதி பெறுவார்கள்.
2. மீன் பிடித்தல், உலர்த்துதல், மீனை விற்றல், படகு கட்டுதல் உள்ளிட்ட மீன் பிடித்தலுடன் இணைந்த மற்ற செயல்பாடுகளில் ஈடுபடும் மீன் தொழிலாளர்கள், பதப்படுத்தும் தொழிலாளர்கள், தூய்மைப்படுத்துதல், தரம் பிரித்தல், ஏலம் போடுதல், பதப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதலில் பொதியாக்குதலில் ஈடுபடும் பணியாளர்களும் இதில் சேர்க்கப்படுகிறார்கள்.
3. TNFWBல் பதிவு செய்து கொள்ள, உணவுப் பங்கீட்டு அட்டை அல்லது வயது, வசிப்பிடம், குடும்ப உறுப்பினர்களுக்குச் சான்று வழங்க மாநில/ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த ஆவணமும் கடவுச்சீட்டு அளவுப் புகைப்படம் ஒன்றும் தேவை.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் மூலப் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. இறப்புச் சான்றிதழ்
4. சட்ட வாரிசுச் சான்றிதழ்
5. விண்ணப்பம் செய்தவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மற்ற சட்ட வாரிசுகள் வழங்கும் கடிதம், ரூ 20/- முத்திரைத் தாளில் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு மட்டும்)
6. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன: கோருதல் படிவம்:
https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20death%20form%207.pdf
https://tnfwb.tn.gov.in/

13.

விபத்து உதவி

திட்டத்தைப்பற்றி

கடலில் நடைபெறும் விபத்துகளின் போது, பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை இது.

உரிமை

இதற்கான உதவி	தொகை
விபத்தினால் மரணம்	2,00,000
இரண்டு கைகள் இழப்பு	2,00,000
இரண்டு கால்கள் இழப்பு	2,00,000
ஒரு கை மற்றும் ஒரு காலை இழத்தல்	2,00,000
இரு கண்களிலும் பார்வையை இழத்தல்	2,00,000
ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	1,00,000
மேற்கண்டவை நீங்கலாக, மிகப் பெரிய காயங்களால் கை, காலை இழத்தல்	50,000

தகுதி

1. 18 முதல் 65 வயதுவரை உள்ள, நாட்டின் உட்பகுதி மற்றும் கடல் சார்ந்த மீனவர்கள் அல்லது மீன் பிடித்தலுடன் இணைந்த செயல்பாடுகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் TNFWBல் பதிவுசெய்துகொள்ளத் தகுதி பெறுவார்கள்.
2. மீன் பிடித்தல், உலர்த்துதல், மீனை விற்றல், படகு கட்டுதல் உள்ளிட்ட மீன் பிடித்தலுடன் இணைந்த மற்ற செயல்பாடுகளில் ஈடுபடும் மீன் தொழிலாளர்கள், பதப்படுத்தும் தொழிலாளர்கள், தூய்மைப்படுத்துதல், தரம் பிரித்தல், ஏலம் போடுதல், பதப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதலில் பொதியாக்குதலில் ஈடுபடும் பணியாளர்களும் இதில் சேர்க்கப்படுகிறார்கள்.
3. TNFWBல் பதிவு செய்து கொள்ள, உணவுப் பங்கீட்டு அட்டை அல்லது வயது, வசிப்பிடம், குடும்ப உறுப்பினர்களுக்குச் சான்று வழங்க மாநில/ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த ஆவணமும் கடவுச்சீட்டு அளவுப் புகைப்படம் ஒன்றும் தேவை.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. ADFன் விரிவான இறப்பு அறிக்கை
2. நல வாரிய அடையாள அட்டையின் மூலப் பிரதி
3. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
4. காவல்துறை FIRன் பிரதி

5. இறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி
6. பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ்
7. பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ் நிலுவையில் இருந்தால் (இறுதி அறிக்கை)
8. சட்ட வாரிசுச் சான்றிதழின் மூலப் பிரதி
9. விண்ணப்பம் செய்தவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் தெரிவித்து மற்ற சட்ட வாரிசுகள் வழங்கும் கடிதம், ரூ 20/- முத்திரைத் தாளில் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்குமட்டும்)
10. CM உதவி நிதி மற்றும் பிற செயலில் உள்ள அரசுத் திட்டங்களிலிருந்து எந்த உதவியும் ஒதுக்கப்படவில்லை என்பதுபற்றிய ADF / வருவாய்த் துறைச் சான்றிதழ்
11. வாரிசுதாரருடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?:

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை
கோருதல் படிவம்:
https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20death%20form%207.pdf

---

14.

கல்வி உதவி

திட்டத்தைப்பற்றி

ஒவ்வோர் ஆண்டும், இந்தத் திட்டம் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களுக்கு 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு, I.T.I. அல்லது பாலிடெக்னிக், இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம், தொழில் வல்லுனர் படிப்புகள் (சட்டம், பொறியியல், மருத்துவம் போன்றவை) மற்றும் முதுநிலைத் தொழில் வல்லுனர் படிப்புகள் ஆகிய கல்விகளுக்கான உதவியை வழங்குகிறது.

உரிமை

இதற்கான உதவி	வீட்டிலிருந்து சென்று படித்தவர்கள் (ஓர் ஆண்டுக்கான தொகை)		விடுதியில் தங்கிப் படித்தவர்கள் (ஓர் ஆண்டுக்கான தொகை)	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
i. 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் - வீட்டிலிருந்து சென்று படித்தவர் மற்றும் விடுதியில் தங்கிப் படித்தவர்	1250	1500	1250	1500
ii. 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் - வீட்டிலிருந்து சென்று படித்தவர் மற்றும் விடுதியில் தங்கிப் படித்தவர்	1750	2000	1750	2000

iii. ITI & பாலிடெக்னிக் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	1250	1750	1450	1950
iv. v. இளங்கலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	1750	2250	2000	2500
v. முதுநிலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	2250	2750	3250	3750
vi. தொழில் வல்லுனர் படிப்புகள் (சட்டம், பொறியியல், மருத்துவம் போன்றவை) - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	2250	2750	4250	4750
vii. தொழில் வல்லுனர் படிப்புகளில் முதுநிலைப் பட்டம் - வீட்டிலிருந்து சென்று படித்தவர்	4250	4750	6250	6750

தேவையான ஆவணங்கள்:

I. 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சிக்கு

i. நல வாரிய அடையாள அட்டையின் பிரதி
ii. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
iii. மதிப்பெண் பட்டியலின் பிரதி
iv. TCயின் பிரதி
v. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி
vi. துணைவரிடமிருந்து, எந்தக் கோருதலும் செய்யப்படவில்லை என்பதற்கான அறிவிப்பு

II. மற்ற பட்டப் படிப்புகள், தொழில் வல்லுனர் படிப்புகள், பாலிடெக்னிக் மற்றும் ITI படிப்புகளுக்கு

i. நல வாரிய அடையாள அட்டையின் பிரதி
ii. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
iii. உண்மைச் சான்றிதழ்
iv. விடுதியில் தங்கும் மாணவர்களுக்கு, விடுதிப் பாதுகாவலரிடமிருந்து விடுதிச் சான்றிதழ்.
v. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி
vi. துணைவரிடமிருந்து, எந்தக் கோருதலும் செய்யப்படவில்லை என்பதற்கான அறிவிப்பு

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

1. https://tnfwb.tn.gov.in/index.php/User/education
2. கோருதல் படிவம்: https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20Education%20(HSC)%20form%209.pdf
3. https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20education%20form%2010.pdf

15.

திருமண உதவி

திட்டத்தைப்பற்றி

இந்தத் திட்டம், பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் அல்லது அவர்களுடைய பிள்ளைகளுக்கான திருமணம் தொடர்பான உதவித்தொகையை வழங்குகிறது.

தகுதி

உறுப்பினருடைய திருமணம், உறுப்பினருடைய மகன் அல்லது மகளுடைய திருமணம்

உரிமை

இதற்கான உதவி	தொகை - ஆண்	தொகை - பெண்
உறுப்பினருடைய திருமணம் அல்லது உறுப்பினருடைய மகன் அல்லது மகளுடைய திருமணம்	3000	5000

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. திருமண அழைப்பிதழ்
4. திருமணச் சான்று
5. திருமணம் செய்துகொண்டோருடைய புகைப்படம்
6. அரசு நடத்திவரும் மற்ற திட்டங்களில் உதவி ஒதுக்கப்படவில்லை என்பது பற்றிய
7. சான்றிதழ் (பெண்களுக்கு மட்டும்)
8. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி
9. துணைவரிடமிருந்து/தன்னிடமிருந்து, எந்தக் கோருதலும் செய்யப்படவில்லை என்பதற்கான அறிவிப்பு

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://tnfwb.tn.gov.in/index.php/User/marriage
கோருதல் படிவம்:
https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20marriage%20form%2012.pdf

16.

கருவுறுதல் மற்றும் குழந்தை பிறத்தல் உதவி

திட்டத்தைப்பற்றி

இந்தத் திட்டம், பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களுக்குக் கருவுறுதல் மற்றும் குழந்தை பிறத்தலுக்கான உதவித்தொகையை வழங்குகிறது.

தகுதி

குழந்தை பிறத்தல், கரு கலைதல் மற்றும் கரு அழிப்பு

உரிமை

இதற்கான உதவி	தொகை
குழந்தை பிறத்தல் (ஆறு மாதங்களுக்கு, மாதந்தோறும் ரூ 1,000)	6000
கரு கலைதல்	3000
கரு அழிப்பு	3000

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. நல வாரிய அடையாள அட்டையின் பிரதி
2. உணவுப் பங்கீட்டு அட்டையின் பிரதி
3. பிறப்புச் சான்றிதழ்
4. மற்ற அரசுத் திட்டங்களில் உதவி ஒதுக்கப்படவில்லை என்பது பற்றிய தொகுதி மருத்துவ அலுவலரின் சான்றிதழ்
5. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி
6. தொடர்புடைய மருத்துவரிடமிருந்து, கரு கலைதல் மற்றும் கரு அழிப்புக்கான மருத்துவர் சான்றிதழ்

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://tnfwb.tn.gov.in/index.php/User/delivery
கோருதல் படிவம்:
https://tnfwb.tn.gov.in//template/claim_forms/Claim%20pregnancy%20form%2013.pdf

17.

வீடு கட்டுதல் - மீனவர் சமூகத்துக்கு மட்டும் (ஒன்றியத் திட்டம்)

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவச் சமுதாய உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. கட்டப்படும் வீட்டில் தூய்மை வசதிகளுடன் சேர்த்துக் குறைந்தபட்ச அடிப்பரப்பு 25 சதுர மீட்டர் இருக்க வேண்டும்.
2. விண்ணப்பம் செய்பவர்கள் மீன் பிடித்தல் செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு கொண்டிருக்கவேண்டும்.
3. வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள (BPL) மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
4. குடிசைகள் வீட்டை உரிமை கொண்டுள்ளவர்களும் விண்ணப்பம் செய்யலாம், அவர்கள் காங்க்ரீட் வீடுகளைப் பெறுவதற்குக் கருத்தில் கொள்ளப்படுவார்கள்.
5. 20க்குக் குறையாத எண்ணிக்கையிலான வீடுகளைக் கொண்ட தொகுப்பு அடிப்படையிலான மேம்பாடு பின்பற்றப்பட வேண்டும்.
6. மாநிலங்கள்/UTக்கள் தூய்மை, நீர், ஆற்றல் போன்றவற்றுக்கான உதவி போன்ற கூடுதல் பலன்களை வழங்கலாம்.
7. மாநிலங்கள்/UTக்கள் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் மாநில நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது பற்றிய ஆவணச் சான்று மற்றும் உறுதிப்படுத்தலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமை

இதற்கு	ஒரு வீட்டுக்கான தொகை
புதிய வீடு கட்டுதல்	1,20,000

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

4.2
கடல் சார்ந்த மீனவர் சொத்துகள்

18.

வீடு கட்டுதல் - மீனவர் சமூகத்துக்கு மட்டும் (மாநிலத் திட்டம்)

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவச் சமுதாய உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர்கள் மீன் பிடித்தல் செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு கொண்டிருக்கவேண்டும்.
2. கட்டப்படும் வீட்டில் தூய்மை வசதிகளுடன் சேர்த்துக் குறைந்தபட்ச அடிப்பரப்பு 25 சதுர மீட்டர் இருக்க வேண்டும்.
3. விண்ணப்பம் செய்பவர்களிடம் வீடு கட்டப்படும் நிலத்துக்கான ஒற்றைப் பட்டா அல்லது குழுப் பட்டா இருக்க வேண்டும்.
4. பட்டா இல்லாவிட்டால், அரசாங்கம் நிலத்தின் விற்பனைப் பத்திரப் பதிவு ஆவணத்தைக் கருத்தில் கொள்ளலாம்.
5. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் NOC பெற்றபின்னர், அரசு நிலத்திலும் வீடு கட்டலாம்.
6. கிராமங்கள்/வழிபாட்டிடங்களுக்குச் சொந்தமான நிலங்களிலும் அவர்களுடைய NOCஐ முறைப்படி பெற்ற பின் வீடு கட்டலாம்.
7. குடிசைகள்/கச்சா வீடுகளில் வசிப்பவர்கள் இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பம் செய்து காங்க்ரீட்/பக்கா வீடுகளைக் கட்டலாம். ஆனால், அவர்கள் பெயரில் எந்தக் காங்க்ரீட் வீடுகளும் இருக்கக்கூடாது.
8. விண்ணப்பம் செய்பவர்கள் வேறு அரசு வீட்டுவசதித் திட்டங்கள் எதிலும் இதற்கு முன் பலன் பெற்றிருக்கக் கூடாது.

உரிமை

இதற்கு	ஒரு வீட்டுக்கான தொகை
புதிய வீடு கட்டுதல்	1,70,000

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

19.

குழாய்க் கிணறு அமைத்தல் - மீனவர்களுக்குக் குடிநீர் வசதி

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவச் சமுதாய உறுப்பினர்கள் குழாய்க் கிணறு அமைப்பதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

குறைந்தபட்சம் 20 வீடுகளைக் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு குழாய்க் கிணறு வழங்கப்படும்.

உரிமை

இதற்கு	ஒன்றுக்கான தொகை
புதிய குழாய்க் கிணறு கட்டுதல்	50,000

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

20.

மீனவர்களுக்கான சமூகக் கூடம் கட்டுதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவச் சமுதாய உறுப்பினர்கள் சமூகக் கூடம் அமைப்பதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்

தகுதி

1. 75 அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகளைக் கொண்ட தொகுதிகள்/ மீனவர் கிராமங்கள் முறையான சமூகச் செயல்பாடுகளுக்குச் சமூகக் கூடம் ஒன்றைப் பெறும் தகுதியைப் பெறுகின்றன.
2. சமூகக் கூடத்தின் குறைந்தபட்ச அடிப்பரப்பு 200 சதுர மீட்டர் இருக்கவேண்டும்.
3. சமூகக் கூடம் கட்டப்பட்டபின், அதைப் பராமரித்தல்/மேலாண்மை செய்தல் கிராமப் பஞ்சாயத்துகள்/மீனவர் சமூகங்கள்/அமைப்புகளின் மேலாண்மைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும்.
4. மாநிலங்கள்/UTக்கள் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் அந்தத் தொகுதி/மீனவர் கிராமத்தில் இப்படிப்பட்ட சமூகக் கூட வசதிகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தத் தேவையான ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமை

இதற்கு	ஒன்றுக்கான தொகை
சமூகக் கூடம் கட்டுதல்	4,00,000

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/WelfareSchemes

21.

பாரம்பரியப் படகை மோட்டார்மயமாக்கல்

திட்டத்தைப்பற்றி

பாரம்பரிய மீன்பிடித்தல் படகுகளுக்கு அவுட்போர்ட் மோட்டார் (OBM) / இன்போர்ட் எஞ்சின் (IBE) வாங்குவதற்கு, ஓர் எஞ்சினின் விலையில் குறைந்தது 40% அல்லது ரூ 48,000 ஆகியவற்றில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

தகுதி

1. மீன் தொழிலாளர் பாரம்பரியப் படகை உரிமை கொண்டிருக்கவேண்டும் & ReALCraftன்கீழ் (சீரான பதிவுச் சான்றிதழ்) சரியான பதிவுச் சான்றிதழையும் சரியான மீன் பிடித்தல் உரிமத்தையும் கொண்டிருக்கவேண்டும். 10 HP வரை திறன் கொண்ட IBM/OBM (2-ஸ்ட்ரோக் மற்றும் 4- ஸ்ட்ரோக்) அனுமதிக்கப்படுகிறது.
2. 5 ஆண்டுகளுக்கு மேலாக எஞ்சின்களை (IBM/ OBM) மாற்றுவதற்கு ஒன்றிய உதவியும் வழங்கப்படும்.
3. இந்த உதவி மீனவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வழங்கப்படும்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
மோட்டார்மயமாக்கல் (மீன் பிடித்தல் கருவி மற்றும் புரொபெல்லர் உள்பட) / படகு	1,20,000
மோட்டார்மயமாக்கல்/படகு	48,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

22.

பாரம்பரிய மீனவர்களுக்கு FRP படகு (10m OALவரை) வாங்க ஆதரவு

திட்டத்தைப்பற்றி

பாரம்பரிய மீனவர்களுடைய வருவாயை மேம்படுத்த, கட்டுமரத்துக்குப் பதில் அவுட்போர்ட் மோட்டார், வலைகள் மற்றும் காப்பிடப்பட்ட பனிக்கட்டிப் பெட்டிகளைக் கொண்ட FRP படகு வாங்குவதற்குக் குறைந்தது 40% மானியம் வழங்கப்படுகிறது.

தகுதி

பாரம்பரிய/சிறுதர மீனவர்கள் மட்டும்தான் இந்தப் பிரிவின் கீழ் பலன் பெறத் தகுதி பெறுவார்கள்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
FRP படகு வாங்குதல் (10m OAL)	4,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. உரிமச் சான்றிதழ்
2. ReALCraftன்கீழ் பதிவுச் சான்றிதழ்
3. மீன் பிடித்தல் உரிமம் மற்றும்
4. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

23.

புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலைப் படகுகளை வாங்குவதற்கு மீனவர்களுக்கு 50% மானியம் வழங்குதல்

திட்டத்தைப்பற்றி

சூரை மற்றும் சூரை போன்ற மீன்கள், பெருங்கடலில் ஒப்பீட்டளவில் மிகுதியாகப் பிடிக்கப்படாத மீன்வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள மீனவர்களுக்கு உதவுவதற்கு, அரசாங்கம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது, புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலைப் படகுகளை வாங்க மீனவர்களுக்கு உதவுகிறது.

தகுதி

சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலைப் படகுகளை வாங்குவதற்கு, தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற திறனுள்ள அலுவலர்களிடமிருந்து முன் அனுமதிகள்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலைப் படகுகளைக் கட்டுதல்	60,00,000

நிதிப் பாணி

- மீனவர் பங்கு: 50%
- மாநில அரசுப் பங்கு: 50%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. உரிமச் சான்றிதழ்
2. ReALCraftன்கீழ் பதிவுச் சான்றிதழ்
3. மீன் பிடித்தல் உரிமம் மற்றும்
4. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

24.

ஆழ் கடல் மீன் பிடி படகு வாங்குதல் - பால்க் விரிகுடா இழுவை மீன் பிடித்தல் பன்முகத்தன்மையாக்கல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டு மீனவர்கள் தங்களுடைய பாரம்பரிய நீர்ப்பகுதிகளில் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையால் பிடிக்கப்படுவது அடிக்கடி நடப்பதால், பால்க் விரிகுடாவில் கீழ் இழுவைகளின்மூலம் மீன் பிடித்தல் இப்போது கவனம் பெற்றுவருகிறது. மீனவர்களையும் அவர்களுடைய மீன் பிடி படகுகளையும் இலங்கை அரசு நெடுநாட்கள் பிடித்துவைத்திருப்பதைத் தடுக்க, பால்க் விரிகுடாவில் இழுவை மீன் பிடி படகுகளை ஆழ் கடல் மீன் பிடி படகுகளாகப் பன்முகத்தன்மையாக்கலுக்கு மீனவர்களுக்கு 70% உதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தகுதி

பால்க் விரிகுடாவைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள விண்ணப்பம் செய்பவர் ஆழ் கடல் மீன் பிடி படகைப் பெறுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடமிருந்து தேவையான முன் அனுமதிகளைப் பெறவேண்டும்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
புதிய ஆழ் கடல் மீன் பிடி படகைக் கட்டமைத்தல் - பால்க் விரிகுடா இழுவை மீன் பிடித்தல் பன்முகத்தன்மையாக்கல்	80,00,000

நிதிப் பாணி

- மீனவர் பங்கு: 30%%
- மாநில அரசுப் பங்கு: 70%

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. உரிமச் சான்றிதழ்
2. ReALCraftன்கீழ் பதிவுச் சான்றிதழ்
3. மீன் பிடித்தல் உரிமம் மற்றும்
4. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

25.

கடலில் மீனவர்களுக்குப் பதுகாப்புப் பைகள்

திட்டத்தைப்பற்றி

மீனவர்களுடைய பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மையை மேம்படுத்தவும் உறுதி செய்யவும், செயற்கைக்கோள் தொலைபேசிகள், GPS, தகவல் தொடர்புக் கருவி, எதிரொலி உண்டாக்குவான், உயிர் காக்கும் உடைகள், உயிர் காக்கும் மிதவைகள், துன்பத்தை அறிவித்து எச்சரிக்கும் பரப்புவான் (DAT), உயிர் காக்கும் கருவிகள் (VHF வானொலித் தொலைபேசிகள்), மீன் கண்டறிவான், காப்புப் பிரதி மற்றும் செய்தி பெறுவான் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

(i) பாதுகாப்புப் பையில் GPS, தகவல் தொடர்புக் கருவி, எதிரொலி உண்டாக்குவான், உயிர் காக்கும் உடைகள், உயிர் காக்கும் மிதவைகள், துன்பத்தை அறிவித்து எச்சரிக்கும் பரப்புவான் (DAT), உயிர் காக்கும் கருவிகள் (VHF வானொலித் தொலைபேசிகள்), மீன் கண்டறிவான், மாற்று மின்கலன், தேடுதல் & மீட்பு வழிகாட்டி ஆகியவை இருக்கும்.

உரிமை

இதற்கு	பைக்கான தொகை
பாதுகாப்புப் பைகள்	2,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. உரிமச் சான்றிதழ்
2. ReALCraftன்கீழ் பதிவுச் சான்றிதழ்
3. மீன் பிடித்தல் உரிமம் மற்றும்
4. உயிரியல் தரவு ID மீனவர் ID அட்டை.

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

26.

கூண்டு மீன்வளர்ப்பை தொடங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யார் வேண்டுமானாலும் தமிழ்நாட்டில் திறந்த கூண்டு மீன்வளர்ப்பை தொடங்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் கடலில் கூண்டுகளை நிறுவுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடம் தேவையான முன் அனுமதிகளைப் பெற வேண்டும்.
2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், SC/ST கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் தொழில்முனைவோருடைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் தலா 5 கூண்டுகளைக் கொண்ட 4 மின்கலன்களுக்கு (20 கூண்டுகள்) மத்திய உதவி பெறத் தகுதி பெறுவார்கள்.
3. இந்தத் தொகுதியின் விலையில் முதலீட்டு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஒரு முறை அடிப்படையில் இடம்பெறுகின்றன.
4. உதவி பெற, விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் தேவையான அனுமதிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுக்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்கவேண்டும்.

உரிமை

இதற்கு	ஒரு கூண்டுக்கான தொகை (இதுவரை)
வட்டக் கூண்டு - ஒவ்வொரு வட்டக் கூண்டும் குறைந்தபட்ச விட்டம் 6 மீட்டர், ஆழம் 4 மீட்டர். செவ்வகக் கூண்டு - 96 கன மீட்டர் பரும அளவு (6 மீ x 4 மீ x 4 மீ)	5,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

27.

கடற்பாசிப் வளர்ப்பு தொடங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் கடற்பாசிப் வளர்ப்பு தொடங்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் கடலில் கூண்டுகளை நிறுவுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடம் தேவையான முன் அனுமதிகளைப் பெற வேண்டும்.
2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், SC/ST கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் தொழில்முனைவோருடைய பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றவை தகுதி பெறலாம்
3. இந்தத் தொகுதியின் விலையில் முதலீட்டு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஒரு முறை அடிப்படையில் இடம்பெறுகின்றன.
4. உதவி பெற, விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் தேவையான அனுமதிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுக்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்கவேண்டும்.

உரிமை

இதற்கு	ஒரு தெப்பத்துக்கான தொகை
3 மீ x 3 மீ அளவு கொண்ட தெப்பம்	1,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

28.

சிப்பி வளர்ப்பு தொடங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் சிப்பி வளர்ப்பு தொடங்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் அடுக்குகளை நிறுவுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடம் தேவையான முன் அனுமதிகளைப் பெறவேண்டும்.
2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், SC/ST கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் தொழில்முனைவோருடைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றவை பொருந்தும் தளங்கள்/இடங்களில் அதிகபட்சம் 40 அடுக்குகளைக் கொண்ட ஒரு மின்கலனுக்கு மத்திய உதவி பெறத் தகுதி பெறுவார்கள்.
3. இந்தத் தொகுதியின் விலையில் முதலீட்டு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஒரு முறை அடிப்படையில் இடம்பெறுகின்றன.
4. உதவி பெற, விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் தேவையான அனுமதிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுக்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்கவேண்டும்.
5. முன்வைப்புகள் தொடர்புடைய மாநில அரசு/ UT நிர்வாகத்தின் வழியாகத் தெளிவான பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும்.

உரிமை

இதற்கு	அடுக்கு ஒன்றுக்கான தொகை
5மீ x 5மீ அளவுள்ள மூங்கில் அடுக்கு	15,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

29.

ஆளி வளர்ப்பு தொடங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் ஆளி வளர்ப்பு தொடங்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் ஆளி வளர்த்தல் தெப்பங்களை நிறுவுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடம் தேவையான முன் அனுமதிகளைப் பெறவேண்டும்.
2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், SC/ST கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் தொழில்முனைவோருடைய பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றவை பொருந்தும் தளங்கள்/ இடங்களில் ஒவ்வொரு குழுவுக்கும் தலா ஒரு திட்டத்துக்கு மத்திய உதவி பெறத் தகுதி பெறுவார்கள்.
3. இந்தத் தொகுதியின் விலையில் முதலீட்டு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஒரு முறை அடிப்படையில் இடம்பெறுகின்றன
4. உதவி பெற, விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் தேவையான அனுமதிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுக்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. முன்வைப்புகள் தொடர்புடைய மாநில அரசு/ UT நிர்வாகத்தின் வழியாகத் தெளிவான பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
ஆளி வளர்த்தல் தெப்பங்கள்	25,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

4.3
உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்த்தல்

30.

புதிய மீன் குளம்/தொட்டியைக் கட்டமைத்தல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவச் சமுதாய உறுப்பினர்கள் புதிய மீன் குளம்/தொட்டியைக் கட்டமைப்பதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் DPRல் வழங்கவேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
2. அமைக்கப்படும் குளங்களின் குறைந்தபட்ச நீர் ஆழம் 1.5மீ இருக்க வேண்டும்.
3. ஒன்றிய நிதி உதவியானது தனி நபர் விண்ணப்பங்களுக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர், கூட்டுறவு சங்கங்கள்/தொகுப்பு அமைப்புகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கை x 2 ஹெக்டேர் என வரம்புக்குட்படுத்தப்படும். இது குள அளவுகள் பொருந்துவதைப் பொறுத்து அமையும். குழு/ தொகுப்புகளுக்கு அதிகபட்சம் 20 ஹெக்டேர் வழங்கப்படும். இந்த வகையின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.

உரிமை

இதற்கு	ஹெக்டேருக்குத் தொகை (இதுவரை)
புதிய மீன் குளம் அமைத்தல்	7,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

31.

ஏற்கெனவே உள்ள குளங்கள்/தொட்டிகளைப் புதுப்பித்தல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் ஏற்கெனவே உள்ள குளங்கள்/தொட்டிகளைப் புதுப்பிக்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் ஏற்கெனவே உள்ள குளங்கள்/தொட்டிகளின் உரிமையையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் (தேவைப்பட்டால்) போன்றவற்றையும் DPRல் வழங்க வேண்டும்.
2. ஏற்கெனவே உள்ள குளங்கள்/ தொட்டிகளைப் புதுப்பித்தல்/பழுது பார்த்தல், வண்டல் மண் அகற்றுதல், பிற தொடர்புடைய குடிமையியல் பணிகள் போன்றவை 5 ஆண்டுகளுக்குப்பிறகுதான் ஒருமுறை அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படும்.
3. ஒன்றிய நிதி உதவியானது தனி நபர் விண்ணப்பங்களுக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர், கூட்டுறவு சங்கங்கள்/தொகுப்பு அமைப்புகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கை x 2 ஹெக்டேர் என வரம்புக்குட்படுத்தப்படும். இது குள அளவுகள் பொருந்துவதைப் பொறுத்து அமையும். குழு/ தொகுப்புகளுக்கு அதிகபட்சம் 20 ஹெக்டேர் வழங்கப்படும்.
4. திட்ட முன்வைப்புகள் (ஒன்றிய அரசு அமைப்புகள்/ இன்ஸ்டேட்ஸுக்கானவை நீங்கலாக) முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்படவேண்டும்.

உரிமை

இதற்கு	ஹெக்டேருக்குத் தொகை (இதுவரை)
ஏற்கெனவே உள்ள மீன் குளங்களைப் புதுப்பித்தல்	3,50,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

32.

மீன்/இறால் விதை, உணவு, புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள குளங்கள்/தொட்டிகளுக்கு உரம் வாங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும், புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள குளங்கள்/தொட்டிகளில் மீன்/இறால் விதை, உணவு, உரம் வாங்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. இந்த உள்ளீட்டுச் செலவு ஏற்கெனவே ஒரு குளம்/தொட்டிகள்/நீர்நிலைகளை உரிமை கொண்டுள்ள விண்ணப்பம் செய்வோருக்கு வழங்கப்படும்.
2. விண்ணப்பம் செய்வோர் புதிதாகக் கட்டப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட குளங்கள்/ தொட்டிகளில் முதல் அறுவடைக்கான உள்ளீட்டுச் செலவுகளுக்கு மட்டும்தான் மத்திய உதவி பெறலாம்.
3. குளங்கள்/ தொட்டிகள் வளர்ப்புக்குத் தயாரானபிறகுதான் உள்ளீட்டுச் செலவுக்கான ஒன்றிய உதவி வெளியிடப்படும்.

உரிமை

இதற்கு	ஹெக்டேருக்குத் தொகை (இதுவரை)
ஃபின்ஃபிஷ் வளர்த்தல்	1,50,000
நன்னீர் இறால்/‘ட்ரவுட்’ வளர்த்தல்	2,50,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

33.

ரேஸ்வே/நிரந்தரப் பண்ணைப் பிரிவு - நீர்வாழ் உயிரினம் வளர்த்தலை அமைத்தல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் ஒரு ரேஸ்வே / நிரந்தரப் பண்ணைப் பிரிவை அமைக்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் DPRல் வழங்கவேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
2. ஒன்றிய நிதி உதவியானது, தனி நபர் விவசாயிகள்/ விண்ணப்பம் செய்வோருக்கு அதிகபட்சம் 4 பிரிவுகள், மீனவர் கூட்டுறவு அமைப்புகள்/ கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோருக்கு 10 பிரிவுகள் எனக் கட்டுப்படுத்தப்படும். இந்த வகையின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
3. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான நிதி உதவி மற்றும் பண்ணைப் பிரிவுகளின் எண்ணிக்கை தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.

உரிமை

இதற்கு	ஹெக்டேருக்குத் தொகை (இதுவரை)
குறைந்தபட்சப் பரும அளவு 50 மீ3 கொண்ட ரேஸ்வே/தனி நபர் பண்ணைப் பிரிவு	2,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

34.

படகுகள் & கருவிகளை வாங்குதல் - உள்நாட்டுப் பகுதி மீன் பிடித்தல்

திட்டத்தைப்பற்றி

நாட்டின் உட்பகுதிகளில் மீன் பிடிக்கத் தேவையான, உரிய அளவிலான படகுகள், மீன் பிடிக்கும் வலைகள், மீன் & பனியை வைத்திருக்கும் பெட்டிகள் போன்றவற்றைத் தமிழ் நாட்டு அரசு மானிய விலையில் வழங்குகிறது.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தகுதியுள்ள அலுவலர் வழங்கிய, சரியான மீன் பிடித்தல் உரிமங்கள் இருப்பதற்கான ஆவணச் சான்றை வழங்க வேண்டும்.
2. தனி நபராக விண்ணப்பம் செய்கிறவர்கள் (தொகுக்கப்பட்டவை), கூட்டுறவு அமைப்புகள்/தொகுப்பு அமைப்புகளின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
3. விண்ணப்பம் செய்பவர் தகுதியுள்ள அலுவலர் வழங்கிய நீர்த்தேக்கங்கள்/ தொட்டிகள் போன்றவற்றில் மீன் பிடித்தல் உரிமைகள்/அனுமதிகள் இருப்பதற்கான ஆவணச் சான்றையும் வழங்க வேண்டும்.
4. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான நிதி உதவி மற்றும் பண்ணைப் பிரிவுகளின் எண்ணிக்கை தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.
5. மீனவர்களுடைய குழு/ தொகுப்பு அமைப்பு ஒன்றும் மீன் பிடி படகு/படகுகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.
6. படகு மற்றும் வலைகளின் அளவு & வகையின் பயன்பாடு பற்றிய மீன் பிடித்தல் கட்டுப்பாடுகள் எவையேனும் இருந்தால், விண்ணப்பம் செய்தவர்கள் அதை மதிக்கவேண்டும்.\
7. 5 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் படகுகளை மாற்றுவதற்கு ஒன்றிய உதவியும் வழங்கப்படும்.

உரிமை

இதற்கு	தொகை (இதுவரை)
உள்நாட்டுப் பகுதிகளில் மீன் பிடிக்கும் படகுகள், பொருட்களை வாங்குதல்	1,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

35.

இறங்கும் மையங்கள், வலையைச் சரிசெய்யும் பந்தல் - உள்நாட்டுப் பகுதிகளில் மீன் வளர்த்தலை அமைத்தல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் உள்நாட்டுப் பகுதிகளில் உள்ள மீன் பிடி பகுதிகளில் இறங்கும் மையங்கள், வலையைச் சரிசெய்யும் பந்தல் அமைக்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் இறங்கும் மையம்பற்றிய முழுமையான தொழில்நுட்பத் தகவல்களையும் DPRல் வழங்க வேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
2. கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகளின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
3. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான நிதி உதவி தீர்மானிக்கப்படும்

உரிமை

இதற்கு	ஒரு பந்தலுக்கான தொகை (இதுவரை)
இறங்கும் மையம்/வலையைச் சரிசெய்யும் பந்தல் ஒன்றை அமைத்தல்	4,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

36.

நீர் தேங்கியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்

திட்டத்தைப்பற்றி

“உள்நாட்டுப் பகுதிகளில் மின் பிடித்தல் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களை வளர்த்தலின் மேம்பாட்டுக்கான”, ஒன்றிய அரசு ஆதரவு அளிக்கும் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படும் பகுதிகளில் ஒன்று, நீர் தேங்கியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் DPRல் வழங்க வேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
2. ஒன்றிய நிதி உதவியானது, தனி நபராக விண்ணப்பம் செய்வோருக்கு அதிகபட்சம் 5 ஹெக்டேர், கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகளாக விண்ணப்பம் செய்வோருக்கு உறுப்பினர் எண்ணிக்கை x 5 ஹெக்டேர் என்ற அளவில் கட்டுப்படுத்தப்படும், இது குள அளவுகள் பொருந்துவதைப் பொறுத்து அமையும். இந்த வகையின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
3. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான, ஒவ்வொரு ஹெக்டேருக்குமான நிதி உதவி தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.

உரிமை

இதற்கு	ஹெக்டேருக்கு லட்சம் (இதுவரை)
நீர் தேங்கியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்	5,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

37.

நீர்த்தேக்கங்களை மேம்படுத்துதல்

திட்டத்தைப்பற்றி

“நாட்டின் உட்பகுதிகளில் மீன் பிடித்தல் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களை வளர்த்தலின் மேம்பாட்டுக்கான”, ஒன்றிய அரசு ஆதரவு அளிக்கும் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒன்று, நீர்த்தேக்கங்களை மேம்படுத்துதல்.

தகுதி

1. இந்தப் பகுதியை NFDB வணிக அணுகுமுறையுடன் செயல்படுத்தும்.
2. விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள விரிவான திட்ட அறிக்கையை (DPR) முழு நியாயப்படுத்தல், தொழில்நுட்பத் தகவல்கள் போன்றவற்றுடன் சமர்ப்பிக்கவேண்டும்.
3. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் & மீன் பிடித்தல் உரிமைகள் போன்றவற்றையும் DPRல் வழங்க வேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
4. DPRகளில், எதிர்பார்க்கப்படும் நேரடி & மறைமுக வேலை வாய்ப்பு உருவாக்கம், மீன் உற்பத்தி மற்றும் செயல்திறன் மேம்பாடு, உள்ளூர் மக்களுடைய பொருளாதார நிலையில் மேம்பாடு, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான குறிப்பிட்ட கால வரிசை ஆகிய தகவல்களும் இருக்கலாம்.
5. கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகள்/ தொகுதி அமைப்புகள்/ தொழில் முனைவோருடைய திட்ட முன்வைப்புகள் NFDBக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான நிதி உதவி மற்றும் பண்ணைப் பிரிவுகளின் எண்ணிக்கை தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.
7. ஒன்றிய நிதியானது பின் முனை மானியமாக வழங்கப்படும்.

உரிமை

இதற்கு	திட்டம் ஒன்றுக்கு (இதுவரை)
நீர் தேங்கியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்	2,00,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன: https://www.fisheries.tn.gov.in/StartABusiness

38.

நீர்த்தேக்கங்கள்/திறந்த நீர்நிலைகளுக்கு உள்ளீடுகளுடன் கூண்டு/அடைப்பிடங்களை வாங்குதல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டில் உள்ள யார் வேண்டுமானாலும் இந்த மாநில மற்றும் ஒன்றிய அரசுத் திட்டத்தைப் பயன்படுத்தி, நீர்த்தேக்கங்கள்/திறந்த நீர்நிலைகளுக்கு உள்ளீடுகளுடன் கூண்டு/அடைப்பிடங்களை வாங்கலாம்.

தகுதி

1. இந்தப் பகுதியை NFDB வணிக அணுகுமுறையுடன் செயல்படுத்தும்.
2. கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகள்/ தொகுதி அமைப்புகள்/ தொழில் முனைவோருடைய திட்ட முன்வைப்புகள் NFDBக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்பம் செய்பவர் நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற நீர்நிலைகளில் கூண்டுகளை நிறுவுவதற்குத் தொடர்புடைய மாநில/UT அரசு மற்றும் பிற தகுதியுள்ள அலுவலர்களிடம் தேவையான முன் அனுமதிகளைப் பெற வேண்டும்.
4. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், SC/ST கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் தொழில்முனைவோருடைய பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் தலா 6 கூண்டுகளைக் கொண்ட 4 மின்கலன்களுக்குப் (24 கூண்டுகள்) பின் முனை மானியம் பெறத் தகுதி பெறுவார்கள்.
5. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான கூண்டுகளின் எண்ணிக்கை & நிதி உதவியின் அளவு தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.
6. இந்தத் தொகுதியின் விலையில் முதலீட்டு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஒரு முறை அடிப்படையில் இடம்பெறுகின்றன.
7. உதவி பெற, விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள திட்ட முன்வைப்புகள் மற்றும் தேவையான ஒப்புதல்கள், அனுமதிகள் போன்றவற்றுக்கான ஆவணச் சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமை

இதற்கு	கூண்டுக்கு (இதுவரை)
நிறுவல் மற்றும் முதல் அறுவடைக்கான உள்ளீடுகள் உட்பட)	3,00,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

39.

பீல்ஸ் / ஈர நிலத்தில் கையிருப்பு மீன் ஃபிங்கர்லிங்க்ஸ்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் பீல்ஸ்/ஈர நிலங்களில் மீன் ஃபிங்கர்லிங்க்ஸைக் கையிருப்பு வைக்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்பவர் தேவையான ஈரநிலம்/ (பீல்ஸ், ஜீல்ஸ், சௌர்ஸ் போன்றவை) எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் DPRல் வழங்க வேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
2. ஒன்றிய நிதி உதவியானது, தனி நபராக விண்ணப்பம் செய்வோருக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர், கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகளாக விண்ணப்பம் செய்வோருக்கு உறுப்பினர் எண்ணிக்கை x 2 ஹெக்டேர் என்ற அளவில் கட்டுப்படுத்தப்படும். இந்த வகையின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
3. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவற்றுக்கான, ஒவ்வொரு ஹெக்டேருக்குமான நிதி உதவி தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.

உரிமை

இதற்கு	இதுவரை
ஈர நிலத்தில் கையிருப்பு மீன் ஃபிங்கர்லிங்க்ஸ்	2,50,000

நிதிப் பாணி

- பொதுப் பிரிவு மீனவர் பங்கு - 60%
- SC/ST/பெண் கூட்டுறவு மீனவர் பங்கு - 40%

எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?

மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளத்துறை

மேலும் தகவல்கள் இங்கு கிடைக்கின்றன:

https://www.fisheries.tn.gov.in/StartABusiness

40.

மீன் தீவன உற்பத்தி ஆலை அமைத்தல்

திட்டத்தைப்பற்றி

தமிழ் நாட்டைச் சேர்ந்த யாரும் மீன் தீவன உற்பத்தி ஆலை அமைக்க இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தகுதி

1. விண்ணப்பம் செய்வோர் தானே கொண்டுள்ள விரிவான திட்ட அறிக்கையை (DPR) முழு நியாயப்படுத்தல், ஆலையின் தொழில்நுட்பத் தகவல்கள் போன்றவற்றுடன் சமர்ப்பிக்கவேண்டும்.
2. விண்ணப்பம் செய்பவர் தேவையான நிலம் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் கிடைப்பதையும் நிதி வளங்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றையும் தேவையான ஒப்புதல்கள்/ அனுமதிகள் போன்றவற்றையும் DPRல் வழங்க வேண்டும். நிலத்துக்கு எந்த நிதியும் வழங்கப்படாது.
3. விண்ணப்பம் செய்த நிறுவனம், ஒன்றிய அரசின் நிதி அளிக்கப்பட்ட உணவு ஆலைத் தொழிற்சாலைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மீன் உணவு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகிற/ நியாயமான விலையில் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
4. உணவு ஆலைகள் அமைக்கப்பட்டபிறகு, அவற்றின் செயல்பாடு, மேலாண்மை மற்றும் பராமரிப்பை விண்ணப்பம் செய்தவர் தன்னுடைய சொந்தச் செலவில் நிறைவான முறையில் நடத்த வேண்டும்.
5. கூட்டுறவு அமைப்புகள்/ தொகுப்பு அமைப்புகளின் திட்ட முன்வைப்புகள் முறையான பரிந்துரைகளுடன், தொடர்புடைய மாநில/UT அரசு வழியாக அனுப்பப்பட வேண்டும்.
6. ஒன்றிய மற்றும் மாநில அரசு அமைப்புகள்/ கூட்டமைப்புகள்/ கழகங்கள்/ முகமைகள் போன்றவை முன்வைப்புகளை DADFக்கு நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும், இவர்களுக்கான நிதி உதவி தொடர்புடையவர்களுடன் பேசி அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.
